The Tamil Nadu Dr.Ambedkar Law University
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்
State University Established by Act No.43 of 1997
NAAC Accredited



# தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக் கழகம்,
# சீர்மிகு சட்டப் பள்ளி

நடத்தும்

# இரண்டாவது தேசிய அளவிலான தமிழ் வழக்குவாத மன்றப் போட்டி 2024 – 2025

**முதன்மை தகுதிச்சுற்று, காலிறுதிச்சுற்று**
**27 & 28 டிசம்பர், 2024 (மெய்நிகர்)**

**அரை இறுதி, இறுதிச்சுற்று**
**25 ஜனவரி, 2025 (நேரலை)**

# இரண்டாவது தேசிய அளவிலான
# தமிழ் வழக்குவாத மன்றப் போட்டி 2024 – 2025

**விதிமுறைகள்**

**1) நாள், நிகழ்விடம்**

**நாள் :**

- 27 & 28 டிசம்பர், 2024 (மெய்நிகர்) &
- 25 ஜனவரி, 2025.

(குறிப்பு – முதன்மை தகுதிச் சுற்றுகள், கால் இறுதிச் சுற்றுகள் "Google meet" என்ற செயலியின் மூலம் "மெய்நிகர்" பயன்முறையில் (virtual mode) நடத்தப்படும். மேலும், அறை இறுதிச் சுற்றுகள் மற்றும் இறுதிச் சுற்று தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக் கழகத்தில் நடைபெறும்)

**நிகழ்விடம்** :
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்
பெருங்குடி வளாகம், எம்.ஜி.ஆர். சாலை, சென்னை 600 113.

**2) அணியினர் தகுதிகள்:**

2.1 தற்போது ஐந்தாண்டு/மூன்றாண்டு சட்டப் படிப்பில் பயின்றுவரும் மாணாக்கர்கள் மட்டுமே பங்குகொள்ள இயலும்.

2.2 ஒவ்வொரு கல்லூரிக்கும் இரண்டு அணிகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

2.3 ஒவ்வொரு அணிக்கும் இரண்டு வாதுரைஞர்கள் ஒரு ஆராய்ச்சியர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

**3) சீருடை:**
பங்கேற்பாளர்கள் மாணவ வாதுரைஞருக்கான உரிய சீருடையில் மட்டுமே நீதிமன்ற அறைக்குள் அனுமதிக்கப்படுவர்.

**4) வழக்காடும் மொழி**:
வழக்குவாதப் போட்டிக்கு தமிழ்மொழி மட்டுமே வழக்காடும் மொழியாக அனுமதிக்கப்படும். ஆங்கிலச் சொற்களை பயன்படுத்தக் கூடாது.

**5) அணி பதிவு செய்யும் முறை:**

- 29.11.2024 முதல் பதிவு செய்யலாம். அணிகள் கீழ்கண்ட Google Form-ல் பதிவு செய்ய வேண்டும்.

**https://docs.google.com/forms/d/e/1FAIpQLSeMYpaWSl8Z8ODvI0InpYgxl_yvvL8dCowWOGetpL_ubYeAQg/viewform?usp=sf_link**

பதிவு செய்த அணிகள், பதிவு படிவம் மற்றும் முதல்வரிடம் இருந்து பெற்ற ஒப்புதல் படிவம் இரண்டையும் Google Form-ல் பதிவேற்றம் செய்யவேண்டும்.

**பதிவுக் கட்டணம்:**

- தனியார் கல்லூரிகள்: **ரூ.1,500/-** (ஒரு அணிக்கு)
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக் கழகத்திற்கு இணைந்த அரசு சட்டக்கல்லூரிகள்: **ரூ.1,200/-** (ஒரு அணிக்கு)

பதிவுக் கட்டணம் NEFT PAYMENT மூலம் மட்டுமே செலுத்தப்பட வேண்டும். செலுத்தப்பட்டதிற்கான ஒப்புகை சீட்டை (TRANSACTION RECEIPT) GOOGLE FORM-ல் பதிவேற்றம் (UPLOAD) செய்யவேண்டும்.

**வங்கி கணக்கின் விவரம்:**

**ACCOUNT NAME:** TAMIL NADU DR. AMBEDKAR LAW UNIVERSITY MOOT COURT ASSOCIATION
**ACCOUNT NUMBER**: 67104604033
**NAME OF THE BANK:** STATE BANK OF INDIA
**BRANCH NAME**: PNSB BRANCH RAJA ANNAMALAIPURAM
**IFSC CODE**: SBIN0070688
**BRANCH CODE:** 70688

**6) எழுத்துவடிவ வாதுரைகள்:**

6.1 கீழ்க்கண்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு எழுத்துவடிவ வாதுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். மீறுகைகளுக்கு மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

6.2 எழுத்துவடிவிலான வாதுரைகள் தமிழில் மட்டுமே இருக்க வேண்டும். தமிழ்ச் சொற்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

6.3.ஒவ்வொரு அணியும் இருதரப்பினர்களுக்குமான எழுத்துவடிவிலான வாதுரைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

6.4 எழுத்துவடிவ வாதுரையை சமர்ப்பித்த பிறகு அதில் திருத்தம் செய்யவோ, இணைப்புகள் சமர்ப்பிக்கவோ கூடுதலாக எழுத்துவடிவ இணைக்கவோ, வாதுரை சமர்ப்பிக்கவோ, கூடுதல் வாதுரைகளை திருத்தம் செய்யவோ அனுமதிக்கப்படமாட்டாது.

6.5.இருதரப்பினருக்குமான எழுத்துவடிவ வாதுரைகளை தனித்தனியாக சமர்ப்பிக்க வேண்டும், எழுத்துவடிவ வாதுரைகளை முறையாக தையலிடப்பட்ட (A4) புத்தக வடிவில் மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருதரப்பினர்களுக்குமான எழுத்துப் பூர்வமான வாதுரைகளை தனித்தனியாக சமர்ப்பிக்க வேண்டும்

6.6 எழுத்துவடிவ வாதுரைகளில் இடம்பெற வேண்டியவை:

6.6.1 முன் அட்டையில் இடம்பெற வேண்டிய விவரங்கள்:

- இடதுபக்க மேல்முனையில் அணி அடையாள எண் கொடுக்கப்பட வேண்டும்.
- வழக்கின் தலைப்பு.
- மனுதாரர்/மேல்முறையீட்டாளருக்கு மேல் அட்டை பச்சை நிறத்திலும், எதிர்முறையீட்டாளருக்கு மேல் அட்டை சிகப்பு நிறத்திலும் இருக்க வேண்டும்.
- வழக்காடும் தரப்பினர் பெயர்.

6.6.2 பொருளடக்கம்

6.6.3 தீர்ப்புகளின் பட்டியல்

6.6.4 நீதிமன்ற ஆள்வரை

6.6.5 குறுகளவு நிகழ்மைகள்

6.6.6 எழுவினாக்கள்

6.6.7 சுருக்க வாதுரை

6.6.8 விரிவான வாதுரை

6.6.9 இறைஞ்சுதல்

6.7 எழுத்துவடிவ வாதுரை:
6.7.1 வரிகளுக்கு இடையிலான இடைவெளி – 1.5வரி இடைவெளி
6.7.2 நான்கு பக்கமும் 1 இஞ்ச் அளவு விளிம்பு இடைவெளி விட வேண்டும்.
6.7.3 எழுத்து வடிவம் – பாமினி, 12 அளவில்
6.7.4 அடிக்குறிப்புகள் -பாமினி, 10 அளவில்
6.7.5 பக்க எண்கள் தாளின் கீழ்ப்பக்கத்தில் மையப் பகுதியில் கொடுக்க வேண்டும்.

6.8 எழுத்துவடிவிலான வாதுரையில் இணைப்புகள், புகைப்படங்கள், வரைபடங்கள், சான்றிதழ், வாக்குமூலம், ஆணையுறுதி, ஆவணங்கள் போன்றவை எதுவும் இடம் பெறலாகாது.
6.9 எழுத்துவடிவிலான வாதுரைகள் அனைத்தையும் உள்ளடக்கிப் பெருமளவாக 40 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
6.10 எழுத்துவடிவிலான வாதுரையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ அணியை அடையாளப்படுத்தும் வகையில் பங்கேற்பாளர்களின் பெயர்களோ, கல்லூரி பெயரோ வேறு எவ்வகையான அடையாளங்களோ இடம் பெறக்கூடாது.

7) **எழுத்துவடிவிலான வாதுரையை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள்:**
7.1 எழுத்துப்பூர்வமான வாதுரைகள் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையில் 22.12.2024 மதியம் 1.00 மணிக்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

**மின்னஞ்சல்: soelsmcc1@gmail.com**

7.2 எழுத்துவடிவிலான ஒவ்வொரு தரப்பு ஒவ்வொரு தரப்பு வாதுரைகளுக்கான மொத்த மதிப்பெண்கள் 100. இந்த மதிப்பெண்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்:

| மதிப்பெண்களுக்கானகாரணிகள் | பெரும் அளவு மதிப்பெண் |
|---|---|
| நிகழ்மை குறித்தத் தெளிவு | 10 |
| சட்ட நுண்ணறிவு | 15 |
| சட்டம், நிகழ்மைகளின் பகுப்பாய்வு | 20 |
| முன்தீர்ப்புகளைக் கையாளும் திறன் | 20 |
| உரிய வடிவம் | 10 |
| வாதுரைகளின் தனித்தன்மை | 15 |
| இலக்கணம், மொழிநடை | 10 |

7.3.1 இருதரப்பு எழுத்துவடிவ வாதுரைகளுக்கு வழங்கப்பட்ட மொத்த மதிப்பெண்களின் சராசரியை அடிப்படையாக கொண்டு சிறந்த எழுத்துப்பூர்வமான வாதுரை தெரிவு செய்யப்படும்.

**7.4 மதிப்பெண் குறைப்பு அளவுகோல்கள்:**

எதிர்மறை மதிப்பெண்களாக பின்வருமாறு வழங்கப்படும்:.

- குறிப்பிட்ட நேரத்தில் வாதுரையை சமர்ப்பிக்கத்தவறினால் 2 மதிப்பெண்கள் தலா ஒரு வாதுரைக்கு முதல் 12 மணி நேரத்திற்கும் குறைக்கப்படும் மற்றும் 1 மதிப்பெண் தலா ஒவ்வொரு ஆறு மணி நேரத்திற்கும் குறைக்கப்படும்.
- தவறான அட்டைக்கு 1 மதிப்பெண் தலா ஒரு வாதுரைக்கு குறைக்கப்படும்.
- கொடுக்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கையை மீறினால் 1 மதிப்பெண் தலா ஒரு கூடுதல் பக்கத்திற்கு குறைக்கப்படும். அதிகபட்ச பக்க எண்ணிக்கை 30 ஆகும்.
- கொடுக்கப்பட்ட உள்ளடக்கத்தை பின்பற்றாமலோ 2 தேவையற்ற உள்ளடக்கத்தைச் சேர்த்தாலோ 1 மதிப்பெண் குறைக்கப்படும்.
- குறிப்பிட்டுள்ள விதிகளை மீறினால் தலா 1 மதிப்பெண் குறைக்கப்படும்.

**8) வழக்காடுதல்/சுற்றுகள்:**

8.1 கால் இறுதிச் சுற்றில் மதிப்பெண் அடிப்படையில் முதல் நான்கு இடம்பிடிக்கும் அணிகள் அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெறுவார்கள்.

8.2 அனைத்து சுற்றுகளுக்கும் எதிர் அணியும் அவர்கள் வாதிட வேண்டிய தரப்பும் குலுக்கல் முறையில் போட்டி நாளன்று தெரிவு செய்யப்படும்.

8.3 வாதிடும் அணிகளைத் தவிர அணிகள் நேரடியாகவோ, தவிர வேறு மறைமுகமாகவோ, பார்வையாளராக இருக்க அனுமதியில்லை.

8.4 அவ்வாறு ஏதேனும் அமைப்புக் குழுவால் கண்டறியப்படின் தொடர்புடைய அணி தகுதிநீக்கம் செய்யப்படும். இதில் அமைப்புக் குழுவின் முடிவே இறுதியானது.

8.5 ஒவ்வொரு அணிக்கும் வழக்காட, மறுத்தளிக்க, மறுத்தளித்தல் குறித்த விளக்கம் கொடுக்க (முன் அனுமதியுடன்) பெரும அளவாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாரு வழங்கப்படும்.

  - தகுதிச் சுற்று இரண்டு சுற்றுகளாக நடத்தப்படும். ஒவ்வொரு சுற்றிலும் அணிகள் வாதி/ பிரதிவாதியாக வாதிடுவர்.
  - வாதி / பிரதிவாதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொரு அணியும் ஒவ்வொரு அணிகளை ஒவ்வொரு அமர்வுகளில் குலுக்கல் முறையில் சந்திப்பர்.

- ஒவ்வொரு சுற்றும் 40 நிமிடங்கள் கொண்டதாக நடத்தப்படும். அதில் ஒவ்வொரு அணிக்கும் தலா 20 நிமிடங்கள் வழங்கப்படும். இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்புத் தெரிவிக்க / பதில் மறுப்புத் தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். வாதாடும் பொருள் அடிப்படையில் கூடுதல் நிமிடங்கள் வழங்கப்படும். இதனை நீதிமன்ற அலுவலகரிடம் முன்பே தெரிவித்திருக்க வேண்டும்.
- தகுதி சுற்றில் முதல் 8 இடங்களைப் பிடித்த அணிகள் கால் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெறும். எந்த அணிகள் வாதி, பிரதிவாதியாக வாதிட வேண்டும் என்பதை குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, கால் இறுதிச் சுற்று நடைபெறும்.
- ஒரு கால் இறுதிச் சுற்று மொத்தமாக 60 நிமிடங்கள் நடைபெறும்.அதில் ஒவ்வொரு அணிக்கும் 30 நிமிடங்கள். வழங்கப்படும். இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்புத் தெரிவிக்க / பதில் மறுப்புத் தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். நேர மேலாண்மையினைக் கருத்தில் கொள்ளுதல் அணியின் அதிகாரத்திற்குட்பட்டதாயினும், ஒரு அணியில்
- வழக்காடுபவர் ஒருவருக்கு தலா 15 நிமிடங்களுக்கு மேல் வழக்கினை எடுத்துரைக்க அனுமதிக்க இயலாது. இதனை கால் இறுதி சுற்று நடைபெறும் முன்பே நீதிமன்ற அலுவலரிடம் தெரிவித்திருக்க வேண்டும்.
- ஒவ்வொரு மாணவ வழக்குரைஞருக்கும் மதிப்பெண்கள் கொடுக்கப்பெற்று, அதில் அதிக மதிப்பெண் பெறும் அணி அரை இறுதிக்கு தகுதி பெறுவார்கள்.
- முதலில் தேர்வாகும் 4 அணிகள் அரை இறுதி சுற்றிற்கு தேர்ந்தெடுக்கப்படுவர். வாதி/பிரதிவாதி யார் என்பது குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும். அரை இறுதி சுற்றிற்கு தேர்ந்தெடுக்கப்படும் அணிகள் அரை இறுதி சுற்று நாளில் (25-01-25) எழுத்துப் பூர்வமான வாதுரைகளை தனித்தனியாக 4 பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டும்.
- ஒவ்வொரு அரை இறுதிச் சுற்றும் 90 நிமிடங்கள் நடத்தப்படும். இரு தரப்பிற்கும் 45 நிமிடங்கள் வழங்கப்படும். இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்புத் தெரிவிக்க/ பதில் மறுப்புத் தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும்.

- நேர மேலாண்மையினை கருத்தில் கொள்ளுதல் அணியின் அதிகாரத்திற்குட்பட்டதாயினும், ஒரு அணியில் வழக்காடுபவர் ஒருவருக்கு 23 நிமிடங்களுக்கு மேல் வழக்கினை எடுத்துரைக்க அனுமதிக்க இயலாது. இதனை அரை இறுதிச் சுற்று நடைபெறும் முன்பே நீதிமன்ற அலுவலரிடம் தெரிவித்திருக்க வேண்டும்.
- ஒவ்வொரு மாணவ வழக்குரைஞருக்கும் மதிப்பெண்கள் கொடுக்கப்பெற்று, இதில் எந்த அணி கூடுதல் மதிப்பெண்கள் பெறுகிறதோ அந்த அணி இறுதிச் சுற்றிற்கு தேர்வாகும்.
- அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் 2 அணிகளும் இறுதிச் சுற்றிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, குலுக்கல் மூலமே வாதாடும் பக்கம் நிர்ணயம் செய்யப்படும்.
- இறுதி சுற்று 90 நிமிடங்கள் நடத்தப்படும். இரு அணிகளுக்கும் தலா 45 நிமிடங்கள் வழங்கப்படும். இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்புத் தெரிவிக்க / பதில் மறுப்புத் தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். வாதாடும் பொருள் அடிப்படையில் கூடுதல் நிமிடங்கள் வழங்கப்படும். இதனை நீதிமன்ற அலுவலரிடம் முன்பே தெரிவித்திருக்க வேண்டும். இறுதிச் சுற்றானது நீதிபதிகள் குழுவால் மதிப்பீடு செய்யப்படும்.

ஒவ்வொரு மாணவ வழக்குரைஞருக்கும் மதிப்பெண்கள் வழங்கப்படும். அதில் அதிகம் மதிப்பெண் பெற்ற அணியினர் வெற்றியாளாராக அறிவிக்கப்படுவார்கள்.

**8.6 வாய்மொழி வாதுரைகளுக்கான மதிப்பெண்கள்:**

| **மதிப்பெண்களுக்கானகாரணிகள்** | **பெரும் அளவு மதிப்பெண்** |
|---|---|
| நிகழ்மை, சட்டம் குறித்தத் தெளிவு | 10 |
| சட்ட கோட்பாடுகளை எடுத்தாளும் திறன் | 15 |
| வினாக்களுக்கு பதில் அளிக்கும் திறன் | 20 |
| முன்தீர்ப்புகளை எடுத்தாளும் திறன் | 20 |
| கால அளவைப் பயன்படுத்தும் திறன் | 10 |
| நீதிமன்ற ஒழுகலாறு | 15 |
| இலக்கணம், மொழிநடை, உடல்மொழி | 10 |

8.7 பங்கேற்பாளர்கள் வாதிடும்போது அவர்களின் அடையாளத்தையோ, அவர்கள் சார்ந்த கல்லூரியின் அடையாளத்தையோ அறிந்துகொள்ளும் வகையில் எவ்விதமான அடையாளத்தையும் அடையாள அட்டைகளையும் நீதிமன்ற அறைக்குள் பயன்படுத்தக்கூடாது மீறும் நேர்வில் அந்த அணி உடனடியாக தகுதிநீக்கம் செய்யப்படும்.

8.8 பங்கேற்பாளர்கள் அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவைகளைப் பின்பற்ற வேண்டும். மீறும் நேர்வில் அந்த அணி உடனடியாக தகுதிநீக்கம் செய்யப்படும்
8.9 வாதிடும்போது அணியினர் மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களால் அங்கீகரிக்கப்பட்ட தீர்ப்புத் திரட்டுகளை பயன்படுத்தலாம். சட்டப் புத்தகங்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம். அவற்றின் தொகுப்புகளை புத்தக வடிவில் வழக்குவாதமன்ற நீதியரசர்களிடம் சமர்ப்பிக்கலாம்.

**9) சிறந்த மாணவ வழக்குரைஞர், ஆராய்ச்சியர் தெரிவு செய்யும் முறை:**
9.1 பங்கேற்கும் அணிகளில் இருந்து வழக்காடுபவர்களில் ஒருவர் சிறந்த மாணவ வாதுரைஞராக தெரிவு செய்யப்படுவார்
9.2 அணிகளில் இருந்து ஒரு ஆராய்ச்சியர் ‘எழுத்துத் தேர்வின் வாயிலாக சிறந்த ஆராய்ச்சியராகத் தெரிவு செய்யப்படுவார். சிறந்த ஆராய்ச்சியர் யார் என்று அறிவிக்க, ஆராய்ச்சியர்களுக்கு எழுத்துத்தேர்வு 24.12.2024 அன்று (மெய்நிகர்) நடைபெறும். இத்தேர்வு 50 மதிப்பெண்களுக்கான தேர்வு ஆகும்.

**10) அணியினர்களுக்கான தங்குமிடம்:**
10.1 பங்கேற்பாளர்களுக்கான தங்குமிட வசதி ஏற்பாட்டை ஏற்பாட்டுக் குழு செய்யும், ஆனால் அதற்கான செலவை பங்கேற்பாளர்கள் தாமே செலுத்த வேண்டும்.
10.2 அணியில் பங்கேற்பவர்களைத் தவிர ஏனையோர் அணியினர் தங்குமிடத்தில் தங்க அனுமதியில்லை. மீறும் நேர்வில் அந்த அணி உடனடியாக தகுதி நீக்கம் செய்யப்படும்.
10.3.அணியில் பங்கேற்பவர்கள் அமைப்புக் குழுவில் ஏற்படுத்தப்பட்டுள்ள தங்குமிடங்களில் ஒழுங்கு, கட்டுப்பாடு, தங்குமிட விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். மீற ஏற்படும் நேர்வில் பின் விளைவுகளுக்குத் தொடர்புடைய அணி பங்கேற்பாளர்களே பொறுப்பேற்க வேண்டும்.

**11) விருதுகள்:**
- முதல் பரிசு
- இரண்டாம் பரிசு
- சிறந்த மாணவ/மாணவி வழக்குரைஞர்
- சிறந்த வாதுரை
- சிறந்த ஆராய்ச்சியர்

**தொடர்புக்கு:**
மின்னஞ்சல்- soelsmcc1@gmail.com

**போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்:**
ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்
டாக்டர். பா. பிருந்தா

**ஆசிரிய இணை ஒருங்கிணைப்பாளர்கள்**
- டாக்டர். ந. அன்பரசி- +91 9629401017
- செல்வி. ஜி.வி.விதுஷா- +91 9600148167
- திரு. அசிஸ் ஸ்டான்லி- +91 9003074521
- திரு. கதிரவன்- +91 8667279923

**மாணவ ஒருங்கிணைப்பாளர்கள்**
- ஹ நா ஸ்ரீ ஹரிணி- +91 7358236570
- டோன்னா கேடியல்- +91 6379014898
- சூர்யா சிவகுமார்- +91 9345825458

# போட்டியின் முக்கிய நிகழ்வுகள்

| | |
|---|---|
| பொருண்மை வெளியீடு | 29.11.2024 |
| விளக்கம் பெறுவதற்கான கடைசி தேதி | 18.12.2024 |
| போட்டியின் கட்டணம் மற்றும் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | 20.12.2024 |
| வாதுரையை சமர்ப்பிக்க கடைசி நாள் | 22.12.2024 |
| சிறந்த ஆராய்ச்சியருக்கானத் தேர்வு - மெய்நிகர் | 24.12.2024 |
| போட்டியின் தொடக்க விழா, குழுக்கள் முறை மற்றும் வாதுரையை பரிமாற்றம் | 27.12.2024 |
| முதன்மை தகுதிச்சுற்று, காலிறுதிச்சுற்று - மெய்நிகர் | 27.12.2024 - 28.12.2024 |
| அரை இறுதி, இறுதிச்சுற்று மற்றும் போட்டியின் நிறைவு விழா | 25.01.2025 |